## 13: மஹின்தாவின் வருகை

தன்னுடைய குருவிடம் போதனை ஏற்று தேராவாக மாறி பன்னிரண்டு வருடத்தில் லங்காவை புத்த சமயத்தில் இணைத்த பெரும் அறிவாளியான மஹின்தா நினைத்தார் 'மன்னன் மூதசிவாவிற்கு வயதாகி விட்டதினால் அவருடைய மகன் இனி ஆட்சிப் பொறுப்பை ஏற்க வேண்டிய தருமணம் வந்து விட்டது'

தன்னுடைய உற்றார் உறவினரையும் தம் சமயத்திற்கு அழைத்து வர வேண்டும் என்பதினால் தன்னுடைய குருவிடமும் மன்னனிடம் இருந்தும் விடை பெற்றுக் கொண்டு இன்றைய உஜ்ஜயினி எனும் தக்கினகிரிக்கு *(Dakkhinagiri)* கிளம்பிச் சென்றார். அவருடன் நான்கு தேராக்கள், சம்ஹமித்தாவின் *(Samghamitta)* மகன், சிறப்பான அம்சங்கள் பெற்றிருந்தவரும் ஆறு வித சித்த சக்திகளையும் பெற்றிருந்த சாமனீர சுமன்னா *(Sumana)* போன்றவர்களையும் அழைத்துச் கொண்டு சென்று இருந்தார். இப்படியாக ஆறு மாதம் கழிந்தது.

அவர் தற்பொழுதைய போபாலுக்கு அருகில் உள்ள குவாலியர் எனும் இடத்தில் இருந்த வேதகிரிக்கு *(Vedisagiri)* சென்று அங்கிருந்த தன்னுடைய தாயார் தேவி *(Devi)* என்பவரை சந்தித்தார். அவருக்கும் அவருடன் வந்தவர்களுக்கும் தாயாரும் மற்றவர்களும் சிறப்பான வரவேற்பு தந்தனர்.

தன்னுடைய தந்தைக்குப் பின் அவன்தியை ஆண்டு வந்த மன்னர் அசோகன் உஜ்ஜயினிக்குப் போகும் முன் வேதகிரிக்கு வந்த பொழுது ஒரு வணிகருடைய புதல்வியான தேவியை கண்டு அவள் அழகில் மயங்கி அவளைத் திருமணம்

செய்து கொண்டார். அவள் உஜ்ஜயினியில் ஆண் மகனாக மஹிந்தாவையும், இரண்டு வருடம் பொறுத்து சங்கமித்தா என்ற மகளையும் பெற்றெடுத்தாள்.

மஹின்தா வோகிரிக்கு வந்த பொழுது அவள் அங்குதான் இருந்தாள். அங்கிருந்த நேரத்தில் தேரா மஹின்தா நினைத்தார் 'என்னுடைய தந்தை பட்டாபிஷேகம் செய்து கொண்ட பொழுது தேவனாம்பியதிஸ்ஸாவும் அதில் கலந்து கொண்டு அவை எப்படி நடைபெறுகின்றன என்பதை அவருடைய தூதுவர்களிடம் இருந்து கேட்டறிந்துள்ளார். அனுராதபுரத்தின் கிழக்கில் உள்ள ஜெட்டா *(Jettha)* மாதத்தில் மிஸாக மலை மீது *(Missaka-mountain)* ஏறப்போகும் அன்று *(தண்ணீர் திருவிழா)* அந்த அற்புத தீபகற்பமான ஸ்ரீலங்காவிற்கு நாமும் செல்ல வேண்டும்'

மஹின்தாவை வழியில் சந்தித்த தேவர் தலைவன் இந்திரா கூறினார் ' லங்காவை சென்றடைந்து அதை புத்த பூமியாக மாற்றுவாய் என முதலிலேயே சம்புத்தர் கூறி உள்ளார். உனக்கு நாங்களும் அங்கு வந்து உதவுவோம்'

'தேராவிற்கு அடுத்த பிறவி இனி கிடையாது, அவர் தெய்வமாகி விடுவார்' என நம்பிய தேவியின் சகோதரியுடைய பாண்டுகா *(Bhanduka)* என்ற ஒரு மகன், தேரா மஹிந்தா தம் குடும்பத்தினருக்கு போதித்தவற்றை கேட்டப் பின் அவருடனேயே இருக்கலானார்.

அந்த தேராவுடன் ஒரு மாதம் இருந்தப் பின் ஜெட்டா மாதத்தில் அரச விழா நடக்க இருந்த தினத்தில் மஹிந்தா

மஹிந்தா தன்னுடைய விஷேச சக்தியை உபயோகித்து தன்னுடன் நான்கு தேராக்கள், சுமன்னா மற்றும் தன்னுடைய சிஷ்யரான பாண்டுகாவை அழைத்துக் கொண்டு ஆகாயத்தில் பறந்து வந்து மிசாக மலையின் சிலா உச்சி *(Sila-peak)* மீது இருந்த அம்பத்தாலா *(Ambatthala)* என்ற இடத்தில் இறங்கினார்.

புத்தர் தான் மரணம் அடையும் முன்னரே லங்காவிற்கு இவர் மூலமே நற்கதி கிடைக்க உள்ளது என அவரை அடையாளம் காட்டி இருந்தார். மேலும் லங்காவின் தெய்வங்கள் அனைவராலும் புகழ்ந்து பாராட்டப்பட்டவர் தேரா மஹிந்தா. அவர் லங்காவிற்கு விமோசனம் தரவே அங்கு வந்து இறங்கினார்.

புனிதரின் பக்தி மார்கத்தில் இணைந்த புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த கருணா மூர்த்தியின் பதிமூன்றாம் பாகமான ‘மஹின்தாவின் வருகை’ இப்படியாக நிறைவுற்றது.

CLICK HERE TO VIEW ENGLISH VERSION